# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

******

**முறையீட்டு மனு எண்: 237/2018/பே**

**ஆணை நாள். 06–09–2019.**

**திரு.அல்லிபாலா (எ) பாலமுருகன்,**
**த/பெ திரு. அல்லிமுத்து,**
**53/7, கூத்தனாட்சி அம்மன் கோயில் தெரு,**
**காமயகவுண்டன்பட்டி,**
**தேனி மாவட்டம்–625521.**

**-- முறையீட்டு மனுதாரர்.**

திரு.மு.சித்திரைக்கனி,
செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

**-- எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி, எண்.53/7 கூத்தனாட்சி அம்மன் கோவில் தெருவினைச் சேர்ந்த திரு.அல்லிபாலா (என்கிற) அ.பாலமுருகன் என்பவரது 26.11.2018 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 237/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.அல்லிபாலா (எ) பாலமுருகன் தனது முறையீட்டு மனுவில், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மு.சித்திரைக்கனி என்பவர் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்துள்ளதாகவும் தனது மனைவி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு துறை அனுமதி பெறப்படவில்லை எனவும் மற்றும் பல்வேறு புகார்களைத் தெரிவித்தும் விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முமைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்..

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 18.12.2018 நாளிட்ட அறிக்கையில், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி மூலம் வழங்கப்படும் கட்டிட அனுமதி மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்பு ஆகியவற்றிற்கான கேட்பு விவரம், முறைப்படி பொது மக்களுக்கு கடிதக்குறிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டு, வங்கி கேட்பு வரைவோலை மூலமாகவே தொகை பெறப்பட்டு, கட்டிட அனுமதி மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும், மேலும் சொத்து வரி நிர்ணயம் செய்யும் கணக்கீட்டு படிவம் சம்பந்தப்பட்ட மனுதாரரின் ஒப்புதல் பெற்ற பின்னரே வரி நிர்ணயம் செய்யப்பட்டு, வரித்தண்டலரால் தொகை வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் திரு.அல்லிபாலா என்கிற பாலமுருகன் காமய்யகவுண்டன்பட்டி பேரூராட்சி பகுதியினை சார்ந்தவர் எனவும்,

பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எவரும் பேரூராட்சி நிர்வாகம் குறித்து எவ்வித புகாரும் தெரிவிக்கவில்லை எனவும், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி மூலம் வழங்கப்பட்ட அனைத்து கட்டிட அனுமதிகளும் நகர் ஊரமைப்புத்துறை மூலம் அனுமதிக்கப்பட்டு, மற்றும் நகர் ஊரமைப்புத்துறையால் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் முறையாக வருடாந்திர திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு உரிய மன்றத் தீர்மானம் பெற்று அதன் அடிப்படையிலேயே செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் பேரூராட்சி மன்றம் / தனி அலுவலரின் ஒப்புதல் பெறப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பணிக்காலத்தில் அரசு நிதியினை முறையாக பயன்படுத்தியதின் மூலமும், செலவினங்களை கட்டுப்படுத்தி வரவினங்களை சரியான முறையில் வசூல் செய்ததின் மூலமாகவும், அனைத்து கட்டிடங்களுக்கும் விடுபாடின்றி வரி விதிப்பு செய்ததின் மூலமாக பழனிசெட்டிபட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பத்திர எண். 0025063/நாள். 19.06.2018ன் படி ரூ.60,00,000/– மற்றும் பத்திர எண் 0025114/நாள்.01.11.2018ன்படி ரூ. 40,00,000/– ஆக மொத்தம் ரூ.1,00,00,000/– பேரூராட்சி கணக்கில் நிரந்தர வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளதாகவும், தனது பணிக்காலத்தில் பேரூராட்சியின் சீரிய நிர்வாகத்தின் காரணமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியினை மாநில அளவில் சிறந்த பேரூராட்சியாக தேர்வு செய்து 15.08.2018அன்று சுதந்திர தின விழாவில் பாராட்டு சான்று வழங்கியும், பரிசுத் தொகையாக ரூ.5,00,000/– வழங்கி கௌரவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி–IV க்கான தேர்வு எழுதி 15.02.1999 முதல் பேரூராட்சித் துறையில் பணி புரிந்து வருவதாகவும், தனது பெயரில் அசையும் சொத்துக்களாக, கரூர் வைஸ்யா வங்கியில் 2008–ஆம் ஆண்டில் கடன் பெற்று ஒரு இரு சக்கர வாகனமும், கனரா வங்கி, உத்தமபாளையத்தில் 2013–ஆம் ஆண்டில் கடன் பெற்று மற்றொரு இரு சக்கர வாகனம் ஆக இரண்டு இரு சக்கர வாகனங்கள் மட்டுமே அசையும் சொத்துக்களாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பெயரில் அசையாச் சொத்தாக திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், நெடுவயல் கிராமத்தில் பட்டா எண்.382 நத்தம் சர்வே எண். 446/66ல் அடங்கிய 762 சதுர அடி உள்ள இடம் மற்றும் அதில் வடக்கு பார்த்து கட்டப்பட்ட 2/196(3) கதவு இலக்கமுள்ள ஆர்.சி.சி. போட்ட வீடு மட்டுமே உள்ளதாகவும், அவை தனது தந்தையார் (திரு.சு.முருகையா, த/பெ.திரு.சுந்தரம்) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பதிவு மாவட்டம், இடைகால் சார் பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.1694/2010ன்படி தானமாக வழங்கியது எனவும், இது தவிர தனது பெயரில் வேறு சொத்துக்கள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது மனைவி திருமதி.மு.சுசீலா என்பவர் மதுரை மண்டலம், உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மருந்தாளுநராக பணி புரிவதாகவும், அவரின் பெயரில் கீழ்க் குறிப்பிட்ட விவரப்படியான அசையா சொத்துக்கள் உள்ளதாகவும், அவை யாவும் முறையாக துறையின் அனுமதி பெறப்பட்டு தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | சொத்தின் விவரம் | நிதி ஆதாரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | தேனி மாவட்டம் பெரியகுளம் வருவாய் கோட்டம், ஆண்டிப்பட்டி வட்டம் மற்றும் கிராமம் பிட்.1 சர்வே எண்.905/4/1, 905எ/3, 721/4/1 ல் | இடத்தின் மதிப்பு ரூ.1,82,747/– DD.411 ஆண்டிப்பட்டி வட்டார பொதுப்பணியாளர் கூட்டுறவு | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.14804/நி.பி.5/2/2013/ |

| | | | |
|---|---|---|---|
| | அடங்கிய 1,819 சதுர அடி இடமும் அதில் கட்டப்பட்டுள்ள வீடு தரைத்தளம் மற்றும் முதல் தளம். | சிக்கன நாணய சங்கத்தில் பெறப்பட்ட கடன் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.<br>கட்டுமானத்தின் மதிப்பு ரூ.26.50 லட்சம்<br>1.IDBI வங்கி கடன் ரூ.20.00 லட்சம்.<br>2.பொது வருங்கால வைப்பு நிதி கடன் ரூ.1.75 லட்சம்.<br>3.கரூர் வைஸ்யா வங்கி நகை அடமானக் கடன் ரூ.4.50 லட்சம்.<br>4.ஊதிய சேமிப்புத் தொகை ரூ.25,000/- | நாள்.06.01.2015ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 2. | மேற்படி வீட்டி -ஆம் தளம் | கட்டுமானத்தின் மதிப்பு ரூ.12.20 லட்சம்<br>1) IDBI வங்கிக் கடன் ரூ.10.00 லட்சம்<br>2) திருமதி சுசீலா என்பவரின் பெயரில் IOB வங்கி கிளையில் உள்ள சேமிப்பு ரூ. 1,11,479/-<br>3) தனது பெயரில் தளவாயபுரம் யூனியன் பேங்க் ஆப இந்திய கிளையில் உள்ள சேமிப்புத் தொகை ரூ. 1,17,804/- | இணை இயக்குநர், நலப்பணிகள் மதுரை மாவட்டம் (இருப்பு) உசிலடப்பம்பட்டி கடித ந,க.எண். 3075/நிபி.2/2017 நாள்.01.02.2018 ன்படி அனுமதி வேண்டி கருத்துரு இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை,சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 3. | தேனி மாவட்டம், பெரியகுளம் வருவாய் கோட்டம், ஆண்டிப்பட்டி வட்டம் மற்றும் கிராமம் பிட்.1 சர்வே எண்.725ல் அடங்கிய 2,184 சதுர அடி வீட்டு மனை | ரூ.2,19,132/- நகைக் கடன் மற்றும் சொந்த சேமிப்பு | திருமதி.மு.சுசீலா என்பவரின் பணிப்பதிவேட்டில் சொத்து விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| 4. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வருவாய் கோட்டம் மற்றும் வட்டம், க.புதுப்பட்டி கிராமம் சர்வே எண்.282/2ல் அடங்கிய 837 ச,அடி வீட்டு மனை | ரூ.27,936/- தனது மனைவியின் உடன் பிறந்த சகோதரர் திரு.மு.காமராஜ் த/பெ திரு முனியாண்டி வடக்குத் தெரு. க.புதுப்பட்டி என்பவர் தனது சகோதரிக்கு தானமாக வழங்கியது. | திருமதி மு.சுசீலா என்பவரின் பணிப்பதிவேட்டில் சொத்து விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| 5. | திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கோட்டம், கடையநல்லூர் வட்டம், அச்சன்குளம்புதூர் கிராமம் சர்வே எண். 445/3, 445/4, 447/11, | சொத்து மதிப்பு ரூ.27.00 லட்சம் நகைக்கடன் ரூ. 18,00 லட்சம் மற்றும் வ.எண். 3 மற்றும் 4ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களின் மேல் ஈட்டுக் கடன் மூலம் பெறப்பட்டத் தொகை ரூ.9.00 | இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண்.40569/இ5/2/218 |

| | | | |
|---|---|---|---|
| | 447/17, 447/16, 447/18, 447/21, 447/22, 443/9, 443/12, மற்றும் 447/23ல் அடங்கிய 2.67 ஏக்கர் நிலம் அதில் அடங்கிய 165 தென்னை மரங்கள் மற்றும் கிணறு பம்பு செட் உட்பட | வட்டம். | நாள்.12.06.2018ன்படி துறை அனுமதி பெறப்பட்டுள்ளது. |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படியான சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் எதுவும் தன் பெயரிலோ தனது மனைவி திருமதி.மு.சுசீலா என்பவரின் பெயரிலோ அல்லது தனது குழந்தைகள் பெயரிலோ இல்லை எனவும், தனது சொத்து விவரக் கணக்கினை தான் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த 2007–ஆம் ஆண்டு காலத்தில், அப்போதைய ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், அதன் பின்னர் 2010, 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தனது மனைவி திருமதி.மு.சுசீலா என்பவர் பணிபுரியும் மருத்துவத் துறையில் சொத்து விவரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி சொத்துக்களுக்கு அரசு/துறை மூலம் அனுமதி பெறப்பட்ட ஆணைகளின் விவரங்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். மேலும், தான் முறையாக ஆண்டுதோறும் வருமான வரிக் கணக்கினை தாக்கல் செய்து வருவதாகவும் தனது அறிக்கையில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். 2016–17ம் ஆண்டிற்கான தனது வருமான வரி கணக்கு தாக்க பட்டிலின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் முறையீட்டு மனுதாரர் திரு. அல்லிபாலா என்கிற பாலமுருகன் எனபவர் தேனி மாவட்டதில் உள்ள வருவாய்த்துறை, சார்பதிவாளர் அலுவலகம், கனிம வளத்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை மற்றும் ஊட்டச் சத்துணவுத் துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலகங்களிலும் தகவல் பெறும் உரிமை சட்டத்தினைப் பயன்படுத்தி அரசு அலுவலர்களை மிரட்டி பணம் பறித்து பிழைப்பு நடத்தி வருவதாகவும், அதன்படி சுயநல நோக்கில் தன்னையும் பல வழிகளில் மிரட்டி பணம் பறிக்க முயன்றதாகவும், அதற்கு தான் உடன்படாததால் இவ்வாறான பொய் புகார்ளைத் தெரிவித்து வருவதாகவும், பொது நலன் இன்றி சுய லாப நோக்கத்தோடு மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வரும் இவரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்யவும் தனது அறிக்கையில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.01.2019 மற்றும் 06.02.2019 ஆகிய தேதிகளில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் முறையே 05.02.2019 மற்றும் 27.02.2019 ஆகிய தேதிகளில் ஆஜராக அழைப்பாணையிடப்பட்டதைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் 04.02.2019 (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) மற்றும் 26.02.2019 (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) நாளிட்ட கடிதங்களில் தனக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் மேற்கண்ட நாட்களில் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும், முறைமன்ற நடுவத்தால் பிறிதொரு நாளில் நிர்ணயிக்கப்படும் விசாரணைக்கு ஆஜராவதாக தெரிவித்த கோரிக்கையினை ஏற்று 06.03.2019 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 03.04.2019 அன்று ஆஜராக முறையீட்டு மனுதாரர் மற்றும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

03.04.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் தற்போது உதவி இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக செயல் அலுவலராகவும், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் அனுப்பிய புகார் மனு குறித்து தனக்கு தெரியும் எனவும், இது தொடர்பாக 18.12.2018ல் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளதாகவும், தனது மனைவி திருமதி.சுசீலா, அவர் பணிபுரியும் மருத்துவத் துறையில் பெற்ற அனுமதி கடித நகல்கள், பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்ட உரிய குறிப்பு நகல்கள் மற்றும் தன்னால் வருமான

வரித்துறைக்கு தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்குகள், அது போன்று தனது மனைவி திருமதி. சுசீலா சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அறிக்கை பெற்று தனது மனைவி பணிபுரியும் துறைக்கு மனு அனுப்புவார் எனவும், தனக்கு மேற்படி புகார் மனுவினை தனது வீட்டு முகவரிக்கு அனுப்பிவைப்பார் எனவும், காரணம் தன்னிடம் சமாதானம் செய்வதற்காக அவரின் நண்பர் திரு. ஸ்ரீதர் மற்றும் திரு.செல்வம் (சட்ட பஞ்சாயத்து நடத்துபவர்கள்) ஆகியோரை அனுப்பி தன்னிடம் பணம் கேட்டு சமாதானம் செய்வது இவர்களின் குறிக்கோள் எனவும், இது போன்று வருவாய்த் துறை, சுரங்கத்துறை, கல்வித் துறை மற்றும் மருத்துவத் துறை போன்ற அலுவலகங்களுக்கும் தகவல் அறியம் உரிமைச் சட்டத்தின் மனு செய்து ஏதாவது பதில் பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது புகார் மனு அனுப்புவார் எனவும், ஏற்கனவே தன்னால் குறிப்பிட்டவாறு முழு நேர தொழிலாக பல்வேறு துறை அலுவலர்களிடம் மிரட்டி பணம் பெறுவதுதான் இவருக்கு பழக்கம் எனவும், மூன்று தினங்களுக்கு முன்னர் தனது மனைவியின் துறைக்கு ஒரு புகார் மனு அனுப்பியுள்ளதாகவும், அதன் நகலினை தனது மனைவியினை பயமுறுத்தும் வண்ணம் தனது வீட்டிற்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். இதனால் தனது மனைவி தன்னைப்பற்றி மனுதாரர் அடிக்கடி புகார் மனு எழுதுகிறார் என்று பயந்து எப்படியாவது தனக்கு பணம் தந்து விடுவார் என்ற நோக்கத்தில் இவ்வாறு செய்வதாகவும், 2015–ஆம் ஆண்டு முதல் இவர் எந்த வேலையும் செய்யாமல் இது போன்று பல்வேறு துறைகளில் இருக்கும் அரசு பணியாளர்கள் மீது புகார் மனு எழுதுவதும் அதை வைத்து பணம் பெறுவதுமாக உள்ளார் எனவும், எனவே தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை தனது விளக்கத்திற்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளுமாறும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்..

03.04.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.அல்லிபாலா (என்கிற) அ.பாலமுருகன் தனது வாக்குமூலத்தில் 26.11.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும், தனது புகார் மனுவில், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலராக திரு.மு.சித்திரைக்கனி என்பவர் கடந்த மூன்று ஆண்டு காலமாக பணியாற்றி வருகிறார் எனவும், அவர் தற்போது பணியாற்றி வரும் அலுவலகத்திலும் இதற்கு முன்பு பணியாற்றிய அலுவலகங்களிலும் பேரூராட்சிகளின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் மனைப்பிரிவு மற்றும் கட்டிட வரைபட அனுமதிக்கு அரசுக்கு, தனியார் செலுத்தும் வளர்ச்சி கட்டணம் மற்றும் வரியினங்களில் பல வழிகளில் சகாயம் செய்து கொடுத்து கணிசமாக பல ஆயிரங்களை லஞ்சமாக பெற்றுள்ளார் என குறிப்பிட்டருந்தமைக்கு, தற்போது தன்னிடம் அதற்கான ஆதாரம் ஏதும் இல்லை எனவும், தனக்கு இது தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்க மூன்று மாதங்கள் அவகாசம் வேண்டும் எனவும், மனைப்பிரிவு மற்றும் கட்டிட அனுமதி தொடர்பான ஒவ்வொரு கோப்பிற்கும் அலுவலக இளநிலை உதவியாளர் மூலம் சம்பந்தப்பட்ட மனுதாரரை கட்டாயப்படுத்தி வசூல் செய்கிறார் எனவும், தன்னால் இது தொடர்பாக மனுவில் குறிப்பிட்டுள்ள தொகை உத்தேசமாக சேர்த்து போட்ட வார்த்தை எனவும், இவ்வாறு கிடைக்கப்பெற்ற பணத்தில் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சி, காமராஜர் நகர் 4–வது தெருவில் திரு. மு.சித்திரைக்கனி என்பவர் தனது மனைவி திருமதி. சுசீலா என்பவர் பெயரில் நான்கு சென்ட் மனையினை பல லட்சம் ரொக்கம் கொடுத்து விலைக்கு வாங்கியதாகவும், திருமதி.சுசீலா என்பவர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணித் துறையில் அரசுப் பணியாளராக பணியாற்றுவதாகவும், மேற்படி மனை வாங்கியது தொடர்பாக அவர் பணியாற்றி வரும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணித்துறையில் எவ்வித முன் அனுமதியும் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இது குறித்து தற்போது ஆவண எண்.830/2008 ஆண்டிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண நகலினை சமர்ப்பிப்பதாகவும், இதனுடன் தான் எழுத்து பூர்வமான வாதுரை ஒன்றினையும் சமர்ப்பிப்பதாகவும் அதனையே தனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்றுமாறும், தான் ஏற்கனவே குறிப்பிட்ட திருமதி.சுசீலா பெயரிலுள்ள காலி மனையிட மனைப் பத்திரம் மற்றும் எட்டு ஆவணங்களை இத்துடன் சமர்ப்பித்துள்ளதாகவும் இதனை தனது மனுவிற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளுமாறும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்துடன் சமர்ப்பித்துள்ள எழுத்து பூர்வமான வாதுரையில் தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் மனைவி திருமதி சுசீலா என்பவர் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் வாங்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாகவும், அவற்றில் கட்டப்பட்டுள்ள வீடு தொடர்பாகவும் உரிய துறையிடம் அனுமதி பெறவில்லை எனவும், மேற்கண்ட வீடு கட்ட, வங்கி மூலம் கடன் பெற்றுள்ளதாகவும் மேற்கண்ட கடன் பெற துறையில் அனுமதி பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூரில் பெறப்பட்ட சொத்துக்களுக்கு துறை அனுமதி பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பழனிசெட்டிபட்டி பேரூராட்சி ஆவணங்களை தகவல் பெறும் உரிமை சட்டம் 2005ன்படி ஆய்வு செய்ய தனது 15.11.2018–ஆம் நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில், பேரூராட்சி செயல் அலுவலரின் 16.12.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், அதன்படி 28.12.2018 அன்று பழனிசெட்டிபட்டி பேரூராட்சி ஆவணங்களை கள ஆய்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டதாகவும், அதன்படி தான் 28.12.2018 அன்று பழனிசெட்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் கள ஆய்வு மேற்கொண்டபோது மேற்படி பேரூராட்சி இளநிலை உதவியாளர் அலுவலக ஆவணங்களை தனது ஆய்வுக்காக காண்பித்ததாகவும், அப்போது செயல் அலுவலர் கலந்து கொள்ளவில்லை எனவும், தான் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி அலுவலக கோப்புகளை ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி ஆய்வில் ஒப்பந்தக்காரரின் செலவுச் சீட்டுகள், தனிஅலுவலரின் தீர்மானங்கள் மற்றும் வீட்டு மனை விற்பனைப் பிரிவு அனுமதி கோப்புகள் ஆகிய ஆவணங்கள் தன்னால் பார்க்கப்பட்டதாகவும் இவற்றில் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 மற்றும் சட்ட பிரிவுகளின்படி மனைப்பிரிவு அனுமதி கோரிய மொத்த நிலத்தில் அரசுக்கு ஒதுக்கவேண்டிய 10% இடம் ஒதுக்குவதிலும் மற்றும் சாலைகளுக்கு ஒதுக்கவேண்டிய இடம் தொடர்பாக மனைப்பிரிவு உரிமைதாரர்களுக்கு சகாயம் காட்டியும் சட்ட விதிகளுக்கு முரணாக மனைப்பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இவ்வாறான வீட்டுமனைப் பிரிவு கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்க நில உரிமைதாரர்கள் மேற்படி அலுவலர்களுக்கு கையூட்டு வழங்கியிருக்க வாய்ப்பு உள்ளது என தெரிவித்தார். மேலும் மேற்படி கள ஆய்வு செய்ய கோரிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 7(1)ன்படி தான் கோரியதாகவும் தனக்கு மேற்படி ஆவணங்கள் வழங்கப்படவில்லை எனவும் தனது வாதுரையில் தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவ 10.04.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது 03.04.2019 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கூறிய புகார்கள் தொடர்பாக உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க மூன்று மாத கால அவகாசம் மனுதாரர் கோரியதை ஏற்று அவகாசம் வழங்கப்பட்டது. மேற்படி காலத்திற்குள் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தெரிவித்தும், அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் தான் கூறிக் கொள்ள ஏதுமில்லை எனக் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து அறிவிப்பாணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் மேற்படி காலக் கெடு முடிந்த பின்னரும் தனது முறையீடு தொடர்பாக ஏற்கனவே விசாரணையின்பேது உறுதியளித்தவாறு எந்த விதமான ஆதார ஆவணங்களையும் இம்முறைமன்ற நடுவத்தில் நாளது வரை சமர்ப்பிக்கவில்லை. மேலும் செயல் அலுவலரின் மனைவி திருமதி.சுசீலா என்பவர் பெயரிலுள்ள வீட்டினை வங்கி கடன் மூலம் கட்டும்போது முறையாக துறை அனுமதி பெறப்படவில்லை என்ற மனுதாரரது குற்றச்சாட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு தொடர்பானதல்ல. காரணம் அவர் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டத்தின் கீழ் பணிபுரியவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலங்கள் மற்றும் முறையீட்டு மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதுரை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மேலும் முறையீட்டு

மனுதாரரால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண். 17786/2016ல் அளித்துள்ள 19.09.2016 நாளிட்ட ஆணையில் முறையீட்டு மனுதாரர் பொது நலம் கருதி வழக்கினை தாக்கல் செய்யவில்லை எனவும், தனது தனிப்பட்ட நலனுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்தியுள்ளார் எனவும் தெரிவித்து வழக்கினை தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளது. மேலும் இம்முறையீடு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் குற்றச்சாட்டுக்களுக்கான போதிய குறிப்பான ஆதார ஆவணங்களின்றி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளதும் உறுதியாகிறது. முறையீட்டு மனுதாரரின் புகார் தொடர்பான ஆதார ஆவணங்களை போதிய கால அவகாசம் அளித்தும் சமர்ப்பிக்காத நிலையிலும், முறையீட்டு மனுதாரர் தரப்பில் தனது புகார் தொடர்பாக கூறிக் கொள்ள எவ்வித முகாந்திரமோ, ஆதார ஆவணங்களோ இல்லை எனக் கருதி முறையீட்டினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளது போல் மனுதாரரது செயல்பாடு/நோக்கம் விதிகளுக்கு புறம்பானதாகவும் தவறானதாகவும் மற்றும் அலுவலர்களை அச்சுறுத்துவதாகவும் இருப்பின் மாவட்ட நிர்வாகம் மூலம் காவல் துறைக்கு புகார் அளித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாமென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

9/9/19

9/9/19

7/8

பெறுநர்

1.திரு. பி.அல்லிபாலா (எ) பாலமுருகன்,
த/பெ திரு. அல்லிமுத்து,
53/7, கூத்தனாட்சி அம்மன் கோயில் தெரு,
காமய்யகவுண்டன்பட்டி,
தேனி மாவட்டம்–625521.

2.செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி.

நகல்

மாண்புமிகு முறைன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.